# இயேசுவே வாரும்



தொடர்பு முகவரி:

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
# 11, தனலட்சுமி ஹவுஸ்,
2 வது மாடி, 2 வது குறுக்குத் தெரு,
திருமால் நகர், பூவிருந்தவல்லி,
சென்னை - 600 056.

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.
Tele : 954630 - 256157


# உலக சிநேகம்

## (The Friendship of the World)

விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் என தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறி இருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கு எழுதுகிறான். யாக்.4:4 இது நமக்கும் திருஷ்டாந்தமாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

1. இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், சுவிசேஷகனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய நான் லவோதிக்கேயா சபைக்காலத்தில் வாழும் தேவப்பிரியரும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. இங்கு அப்போஸ்தலனாகிய பவுல், ரோமாபுரியருக்கு எழுதின நிருபம் ஏழாவது அதிகாரம், முதல் ஆறு வசனங்களைத் தியானிக்க விரும்புகிறேன். அப்போஸ்தலனாகிய பவுல், நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன் என்கிறான். நானோ, ஒரே தேவன் உண்டு, அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று விசுவாசிக்கிறோம்; இயேசு கிறிஸ்து எங்களுடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் (1கொரி.15:3) என்று விசுவாசிக்கிறோம்; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பாவ மன்னிப்பைப் பெறுவான் என்று எழுதியிருக்கிறபடி (அப்.10:43) மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுள்ளோம் (அப்.2:38); மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறாததினால் பரிசுத்தஆவியை பெறவில்லை என்று அறிக்கையிடும்; மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றதினால் பரிசுத்தஆவியை பெற்றுவிட்டேன் என்று மார்பு தட்டி கூறுகின்ற (கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல. ரோ.8:9); லவோதிக்கேயா சபைக் காலத்தில் வாழ்கிறேன், அந்தச் சபை தூதனுடைய செய்தியைக் கேட்டு, இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்துவருகிறேன் என பெருமைப்பாராட்டிக்கொள்ளும்; புத்தியுள்ள, கற்புள்ள கன்னிகையாக எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறேன் என வாய்ப்பேச்சு பேசும் மக்களுக்காக இதை எழுதுகிறேன்.

3. அப்போஸ்தலனாகிய பவுல், சபையை ஒழுங்குபடுத்த ரோ.7:1-6ல் எடுத்தப்பட்ட உவமானத்தை ஒரு எடுத்துக்காட்டாகக் கையாளுகிறான். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஒழுங்குபடுத்தியதில் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு பெரும்பங்கு உண்டு. நியாயப்பிரமாணத்தின்படி ஒரு புருஷனுக்கும், ஸ்திரீக்கும் உள்ள ஒழுங்குமுறையை திருஷ்டாந்தமாகக் கொண்டு பவுல் புதியஏற்பாடு சபையை ஒழுங்குபடுத்துகிறான்.

4. நியாயப்பிரமாணம் (Law) சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இது ஒழுங்குமுறைக்கான சட்டங்களைக் (Rules of conduct) கொண்டது. ஆக பவுல், இந்த சட்டத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன் என்கிறான். நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவர் யார்? கர்த்தர் நியாயப்பிரமாணிகர். Lord is our law giver ஏசா.33:22. இந்த நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளது. ரோ.7:12. அதோடுமட்டுமல்ல இது ஆவிக்குரியதாயும் இருக்கிறது. ரோ.7:14. ஏனென்றால் கர்த்தருடைய வேதம் (நியாயப்பிரமாணம்) குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்பிக்கிறதுமாயிருக்கிறது. The law of the Lord is perfect, converting the soul. சங்.19:7. மோசே நியாயப்பிரமாணத்தைப் பெற்றான். யாத்.20 அதி. இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் முழுவதையும் அவன் ஒரு புஸ்தகத்தில் எழுதியும் வைத்தான். இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்திலே வைக்கவும் கட்டளையிட்டான். (உபா.31:24-26)

5. இந்த நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? பாவம் இன்னதென்று நாம் நியாயப்பிரமாணத்தினாலே அறியவந்தோமேயன்றி மற்றபடியல்ல. ரோ.7:7. அதாவது பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினாலே வந்தது. ரோ.3:20. Law is the knowledge of sin. பாவம் செய்வதை தடைபண்ணுவதே நியாயப்பிரமாணத்தின் நோக்கம். நியாயப்பிரமாணத்தின்படி செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான். ரோ.10:5. நியாயப்பிரமாணமோ விசுவாசத்துக்குரியதல்ல; அவைகளை செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான். கலா.3:12. கர்த்தருடைய வேதத்தின்படி (நியாயப்பிரமாணத்தின்படி) நடக்கிற உத்தமமார்க்கத்தார் பாக்கியவான்கள். சங்.119:1. Blessed are who walk in the law of the Lord. சாலொமோன் கர்த்தருடைய வேதம் (நியாயப்பிரமாணம்) என் மனமகிழ்ச்சி என்று கூறுகிறான். சங்.119:174. O Lord thy law is my delight.

6. இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடக்காதவன் சபிக்கப்பட்டவன். உபா.17:26. நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்பட்டது அல்ல. 1தீமோ.1:9-11. அதே வேளையில் எல்லோரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களானார்கள். ரோ.3:23. எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. ரோ.3:20.

7. புருஷனையுடைய ஒரு ஸ்திரீ, தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படி தன் புருஷனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள். ரோ.7:2. தன் புருஷன் மரித்தபின்பு, அவனுடைய பிரமானத்திலிருந்து விடுதலையாகிறாள். ரோ.7:2. ஒரு ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்கையில் வேறொருவனை விவாகம் பண்ணக்கூடாது. அவ்வாறு செய்தால் அவள் ஒரு விபசாரி. ரோ.7:3. ஒரு ஸ்திரீ தன் புருஷன் மரித்தபின்பு வேறொருவனை விவாகம் பண்ணலாம். ஏனென்றால் அவள் தன் முதல் புருஷனுடைய பிரமானத்தினின்று விடுதலையாகிவிட்டாள். ஆதலால் அவள் விபசாரியல்ல. ரோ.7:3. ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறது. ரோ.7:1. ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான ஒருவன், கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்து அதினின்று விடுதலையாக்கப்பட்டு, கிறிஸ்து என்னும் வேறொரு புருஷனுடையவனாகிறான். ரோ.7:4,6.

8. புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் அவனுடைய நிபந்தனைக்குட்பட்டு இருக்கிறாள். ரோ.7:2, 1கொரி.7:39. ஒரு ஸ்திரீக்கு அவள் புருஷன் தலை. 1கொரி.11:3. ஆனால் ஆதியில் அவ்வாறு இல்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் சமஅந்தஸ்துடையவர்களாயிருந்தனர். ஏவாளுடைய கீழ்படியாமையினாலே, ஆதாம் அவளை ஆண்டுகொள்ள கர்த்தர் தம் முதல் பிரமானத்தை மாற்றியமைத்தார். ஆதி.3:16. இதனால் ஸ்திரீக்கு புருஷன் தலையானான். ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷனுடைய ஆளுகைக்கு உட்பட்டவளானாள். ஏனென்றால் ஸ்திரீ, புருஷனுடைய சரீரத்தின் ஒரு பாகமாக இருக்கிறாள். புருஷன் ஸ்திரீயின் சரீரத்தின் ஒரு பாகம் அல்ல. இன்று அநேக விசுவாசிகளின் இல்லங்களில் ஸ்திரீகள் தங்கள் புருஷர்களை ஆட்கொள்வதை, ஆளுகை செய்வதை காண்கிறேன். ஸ்திரீ, புருஷனை தஞ்சாவூர் பொம்மை மாதிரி ஆட்டிவிட அவர்கள் அங்குமிங்கும் ஆடுகிற வர்ளாயிருக்கிறார்கள். பெண்களே எல்லாக் காரியத்திலும் முடிவு எடுக்கிறார்கள். பெண்கள் ஆண்களாகவும், ஆண்கள் பெண்களாகவும் காணப்படுகிறார்கள். இது ஒரு பெரிய வெட்கக்கேடாகக் காணப்படுகிறது. அதுவும் இக்கடைசிக்கால செய்தியில் இருக்கிறோம் என்பவர்கள் வீடுகளில் அதிகமாகக் காணப்படுவது மிகமிக கேவலமாக இருக்கிறது. இவர்களது நடத்தைகள் வேதத்தையும், இக்காலத்துக்குரிய செய்தியையும் தாறுமாறாக்குகிறது. எனக்கு அறிமுகமான ஒரு பாஸ்டர் வீட்டிற்குச் சென்று, அவரிடம் பேச உட்கார்ந்தால், அவரது மனைவியும் அங்கு வந்து அவர் அருகில் நின்று தேவனுடைய வார்த்தைக்கடுத்த காரியங்களை தன் கணவனாகிய பாஸ்டருடன் நின்று பேசு ஆரம்பித்து விடும். பாஸ்டர் அதைத் தடுப்பதில்லை. சுமார் 200 பேர்களைக் கொண்டு இவரது சபையில், புருஷர்கள் ஸ்திரீகள் கரங்களில் தஞ்சாவூர் பொம்மையாகத்தான் இருப்பார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஏனென்றால் மேய்ப்பனுடைய வழி எதுவோ அதுவே சீஷனுடையதும் ஆகும்.

9. நான் சபைகளுக்குப் போயிருக்கிறேன். இப்பொழுது நான் இதை பயபக்தியுடன் கூறுகிறேன். நான் இதை அநேக முறை சபைகளில் கண்டிருக்கிறேன். ஜனங்கள் ஒருவர் இன்னொருவருடைய ஆவியை, பரிசுத்தஆவிக்குப் பதிலாக பெற்றுக் கொள்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். நீங்கள் ஒரு சபைக்குச் சென்று, ஒரக்கால் அங்கே போதகர் அவருடைய தலையை அசைக்கிறதை கவனித்துப் பாருங்கள்; முழு சபையுமே அதைச் செய்யும். நீங்கள் போதகர் தன்னுடைய கரங்களிலிருந்து எண்ணெய் வடிகிறது என்று கூறுகிறவருடைய சபைக்குச் செல்லுங்கள்; முதலாவது காரியம் உங்களுக்குத் தெரியுமா? முழு சபையுமே அதை விசுவாசிக்கும். அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். நடனமும், குதிப்பும், சுற்றி ஓடுதலுமாய் இருக்கின்றதான ஒரு சபைக்கு நீங்கள் செல்லுங்கள். நான் இந்தக் காரியங்களை பழித்துரைத்துக் கொண்டிருக்கவில்லை. நான் கவனித்தவைகளிலிருந்து வெறுமனே ஒரு குறிப்புக்காக உங்களுக்குக் கூறிக்கொண்டிருக்கிறேன். மிகவும் உணர்ச்சிவசப்படுகின்ற ஒரு போதகர் உங்களுக்குக் கிடைத்தால் முழு சபையாருமே உணர்ச்சிவசப்படுகிறவர்களாயிருப்பார்கள். விரைப்பான, பிடிவாதம் உள்ள ஒரு போதகரை நீங்கள் பெற்றிருந்தால் முழு சபையுமே விரைப்பாயும், பிடிவாதமுள்ளவர்களுமாய் இருப்பார்கள். நீங்கள் ஒருவர் இன்னொருவருடைய ஆவியைப் பெற்றுக் கொள்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். (தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறார், பக்கம் 21, பத்தி 81)

10. ஸ்திரீ தன் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்படிந்திருக்க வேண்டும். எபே.5:24. பூர்வ காலத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்தஸ்திரீகள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். உதாரணமாக சாராள், ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்படிந்திருந்தாள். 1பேது.3:5,6. சில குடும்பங்களில் ஸ்திரீகள் தங்கள் புருஷருக்கு செவி கொடுப்பது இல்லை, ஆலோசனைகளைக் கேட்பதில்லை. இவர்களுக்கு எல்லாம் இவர்களது பாஸ்டர்கள் தான். பாஸ்டர், இதுக்குறித்து அப்படி இப்படி சொன்னார் என்கிறார்கள். தன் புருஷனை மதிக்காது, பாஸ்டரை மதிக்கும் ஒரு ஸ்திரீ, ஒரு ஒழுங்கம் கெட்டவள் தான். இவள் தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறாள். நீங்கள் எந்தவொரு காரியத்தைக் குறித்தும் கற்றுக்கொள்ள விரும்பினால், அதை வீட்டிலே உங்கள் புருஷரிடத்தில் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதம் போதிக்கிறது. 1கொரி.14:35. ஆக, மனைவியானவள் தன் புருஷனுக்கு ஓரிரு காரியத்தில் மட்டுமல்ல எல்லாக் காரியத்திலேயும் கீழ்படிந்திருக்க வேண்டும். தீத்.2:5, 1தீமோ.2:11, 1பேது.3:1,5.

11. பெண்கள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாயிருக்க வேண்டும். தீத்.2:5. கர்த்தர் சபையை (தமது மணவாட்டியை) போஷித்து காப்பாற்றுகிறது போல, ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் (தன் மனைவியை) போஷித்துக் காப்பாற்ற வேண்டும். எபே.5:28,29. கணவனால் வேலை செய்து, குடும்ப பாரத்ததை தாங்க முடியவில்லை. ஏனென்றால் அவன் வியாதிப்பட்டுவிட்டான். ஒரு பெண் கணவனை இழந்துவிட்டால். அவளை ஆதரிக்க யாருமில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் அவள் வேலைக்கு வெளியே போகாமல், தன் வீட்டிலிருந்தே ஏதாவது ஒரு கைத்தொழில் செய்துகொண்டு தன் குடும்பதை நடத்தலாம். திருமணம் ஆனால்கூட பெண்கள் வீட்டிலிருந்துகொண்டு ஏதாவது தொழில் செய்யலாம். ஆனால் அவர்கள் கண்டிப்பாக வெளியே செல்லக்கூடாது. ஆனால் இக்காலத்தில், அநேக பாஸ்டருடைய மனைவிகள் வெளியே வேலைக்குச் செல்லுகிறார்கள். அநேக விசுவாச சகோதரர்களுடைய மனைவிகள் வெளியே வேலைக்குச் சென்று வருகிறார்கள். இந்த பாஸ்டர் தேவசித்தத்துக்குப் புறம்பாக அவருக்கென்று ஒரு பணியை செய்கிறார். இந்த சகோதரனுடைய

வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தைப் பிரதிபலிக்கிறதாகயில்லை, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு பாத்திரமாகயில்லை. நீ உன் மனைவியை வேலைக்கு அனுப்புவதே பணம் சம்பாதிக்க. உன் சம்பளம் போதும் என்ற மனப்பான்மையில்லை. பொருளாசையின் நிமித்தமாகவே நீ அவளை வேலைக்கு அனுப்புகிறாய். கர்த்தர் உன் கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிப்பதில் மனரம்மியமாயிருக்க உனக்கு மனமில்லை. உன்னுடைய பொருளாசை ஒரு விக்ரகாராதனை. எபே.5:5. இந்த பாஸ்டரும், விசுவாசிகளும் விக்ரகாராதனைக்காரர்களே.

12. சபைக்கு கிறிஸ்து தலை. அவரே சரீரத்துக்கு இரட்சகர். ஆதலால் சபையானது கிறிஸ்துவுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிந்திருக்க வேண்டும். எபே.5:23-24. சபையானது தனக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு முற்றிலுமாக, மனப்பூர்வமான கீழ்படிய வேண்டும். ரோ.6:17. சபையானது அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. எபே.2:20. சபையானது பாஸ்டருடைய உபதேசத்தின் மேல் கட்டப்படவில்லை. மாறாக பாஸ்டர் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய உபதேசத்தின்படி சபையை வழிநடத்த வேண்டும். பாஸ்டர் தன் சுயஉபதேசங்களை சபைக்குள் திணிக்கக் கூடாது. ஆனால் இந்நாட்களில் பாஸ்டர்கள் தங்கள் தங்கள் சுயகருத்துக்களை, உபதேசங்களை சபை மக்கள் மீது திணிக்கிறார்கள். இவர்கள் கள்ள கபடமுள்ள வேலையாட்கள். இவர்கள் தேவனால் ஏற்றபடுத்தப்பட்டவர்கள் அல்ல.

13. தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை விசுவாசிக்கிறேன் எனக் கூறும் ஒரு பாஸ்டர், திருமணத்தில் ஆண், பெண் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலி/மோதிரம் அணியக்கூடாது என்று எப்படி உபதேசிக்க முடியும்? எப்படி சபை பக்திவிருத்திக்கு ஐந்துவகை ஊழியங்கள் கிடையாது, பாஸ்டர் ஊழியம் மட்டுமே உண்டு என்று உபதேசிக்கக்கூடும்? எப்படி ஒருவர் அரசாங்க உத்தியோசத்திலிருந்து கொண்டு சபைக்கு பாஸ்டராக பணிபுரியமுடியும்? திருமணம் ஆகாமல் இருந்துகொண்டு எப்படி ஒருவர் சபைக்கு பாஸ்டராக இருக்க முடியும்? எப்படி ஒரு உண்மையான பாஸ்டர், சபைக்கு வரும் தசமபாகத்தை இதர நான்குவகை ஊழியங்களுக்கும் பகிர்ந்து கொடுக்காது அனைத்தையும் தன் கொப்பரையிலே போட்டுக்கொள்ள முடியும்? ஒருவன் தன்னை பாஸ்டர் என அழைத்துக்கொண்டு எப்படி ஊர் ஊராக சுற்றி ஊழியம் செய்கிறேன் என கூறமுடியும்? எப்படி சபை பக்திவிருத்தி ஊழியத்துக்காக அழைக்கப்பட்டுள்ளேன் எனக் கூறி, சபைக்கு புறம்பாக வெளியே ஊழியம் செய்துகொண்டிருக்க முடியும்? பிரியமானவர்களே, இப்படிப்பட்டவர்கள் யாவரும் கள்ள கபடமுள்ள வேலையாட்களே. இவர்கள் தேவனால் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்லவேயல்ல. இவர்களை நம்பி மோசம் போகாதீர்கள். இது என்றும் காணப்படாத கொடி வஞ்சிப்பின் காலம்.

14. பிரியமானவர்களே, ஒருவன் திருவசனத்தை கேட்கிறவனாய்மாத்திரமல்ல, அதை விசுவாசிக்கிறவனாய் மாத்திரமல்ல, ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்படிந்து, அதன்படி செய்கிறவனாயிருக்க வேண்டும். தேவனுடைய ஆவியை உடையவனே தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிய முடிவும். சாத்தான் கீழ்படிவது போல மாய்மாலம் பண்ணுவான். அப்படியானால் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாதவர்கள் சாத்தானின் பிள்ளைகளே, ஊழியக்காரர்களே.

15. ஒரு ஸ்திரீ தன் புருஷன் மரித்தபின்பு அவனுடைய பிரமானத்திலிருந்து விடுதலையாகிறாள். ரோ.7:2. அவன் தன் புருஷன் மரித்தபின்பு மறுவிவாகம் செய்துகொள்ள விரும்பினால் செய்துகொள்ளலாம். தனக்கு இஷ்டமான, ஆனால் கர்த்தருக்குட்பட்ட ஒருவனை விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள். 1கொரி.7:39. ஆனாலும் அவள் அப்படியே இருந்துவிட்டால் நலம் என பவுல தன் அபிப்பிராயத்தையும் கூறுகிறான். 1கொரி.7:40. கணவனை இழந்த ஒரு ஸ்திரீ, மறுமணம் செய்து கொள்ள விரும்பினால் கர்த்தருக்குட்பட்ட ஒருவனையே மறுமணம் செய்துகொள்ள வேண்டும். அந்நியநுகத்திலே அவிசுவாசியுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. 2கொரி.6:14. அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? 2கொரி.6:15. பாருங்கள், மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழக் கூடாது. உபா.22:10. ஆதலால் ஒரு விசுவாசி, ஒரு விசுவாசியையே திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

16. ஒருவன் தன்னை சபை பக்திவிருத்திக்கு கர்த்தரால் ஐந்துவகை ஊழியத்தில் பாஸ்டராக ஏற்படுத்தப்பட்டவன் என்று கூறிக்கொண்டு, தன் பிள்ளைகளை அவிசுவாசிகளுக்கு எப்படி திருமணம் செய்துவைக்கலாம்? தன் பிள்ளையை, ஒரு விபசாரக்காரனுக்கு அதாவது தன் முதல் மனைவியை தள்ளிவிட்டவனுக்கு எப்படி திருமணம் செய்துவைக்கலாம்? நிச்சயமாக இப்படிப்பட்ட பாஸ்டர்களெல்லாம் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. நமது மத்தியில் இப்படிப்பட்டவர்கள் அதிகமதிகம். ஆதலால் அவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். பாஸ்டர் ரவீந்திரராஜ், பாஸ்டர் பால்சங்கரன் இதற்கு விதிவிலக்கல்ல. தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளாத இவர்களுக்கு பாஸ்டர் உத்தியோகம் ஒரு கேடா? இவர்கள் தேவனை அறிந்திருக்கிறோம் என்று அறிக்கைப் பண்ணுகிறார்கள். ஆனால் கிரியைகளினாலே அவரை மறுதலிக்கிறார்கள். தீத்.1:9,16.

17. ஸ்திரீ, தன் புருஷன் உயிரோடிருக்கையில் வேறொருவனை விவாகம் பண்ணினால் அவள் விபசாரி. ரோ.7:3. ஏனென்றால் அவளுக்கு ஒரே நேரத்தில் இரு புருஷர்கள். திருமண ஒப்பந்தம் மரணம் ஒருவரை ஒருவர் பிரிக்குமளவும் ஆகும். மேலும் விவாகரத்து விவாகத்தை கலைப்பதில்லை. தேவனுடைய வார்த்தை விவாகரத்துக்கு இடம் கொடுப்பதில்லை. இவ்வாறாக விபசாரம் செய்கிறவள் தனக்கு தேவனிடத்தில் உள்ள உரிமையையும், தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் உரிமையையும் பரிகொடுத்து விடுகிறாள். 1கொரி.6:9,10. காரியம் இப்படியிருக்க இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டு, சபையை பக்திவிருத்தியடைச் செய்ய கர்த்தர் என்னை பாஸ்டராக ஏற்படுத்தினார் என்று கூறும் ஒருவன் எப்படி இரு மனைவிகளையுடையவனாயிருக்க முடியும்? நிச்சயமாக கர்த்தர் அவனை ஏற்படுத்தவில்லை. அவன் பொய்யன். அப்படிப்பட்டவர்களை விட்டு விலகுங்கள். இவர்கள் ஊழியம் செய்ய தகுதியற்றவர்கள்.

18. புருஷன் மரித்தபின்பு, ஸ்திரீ அவனுடைய பிரமானத்திலிருந்து விடுதலையாகிறாள். ஆதலால் அவள் வேறொருவனை விவாகம் பண்ணிக்கொள்ளலாம். அவள் விபசாரியல்ல.

19. சபையானது கிறிஸ்துவின் சரீரமாயும், அவருடைய மணவாட்டியாயும் இருப்பதால், ஒரு ஸ்திரீக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுகிறது. சரீரம் ஒரே அவையவமாயிராமல் அநேக அவையவங்களாயிருக்கிறது. அவையவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே. நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களுமாயுமிருக்கிறீர்கள். 1கொரி.12:14,20,27. ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தவர்கள் தனித்தனியே அவையவங்களாயும், மொத்தமாக கிறிஸ்துவின் சரீரமாகவும் இருக்கிறார்கள்.

20. ஒரு ஸ்திரீயின் சரீரம் ஜீவன் விதைக்கப்படும் நிலம். ஆனால் ஜீவன் தேவனிடத்திலிருந்து வர வேண்டும். தேவனுடைய சிருஷ்டிப்பில், மனுக்குலத்தில் பெண்களுக்கு மட்டுமே உரியதான ஒரு **தனிப்பண்பு-கற்பு.** இந்த கற்புத்தன்மை தேவனுடைய சிருஷ்டிப்பில் வேறு எந்த பெண்குலத்துக்கும் கொடுக்கப்படவில்லை. ஸ்திரீ அந்த கற்புத்தன்மையை ஒரு போதும் கறைப்படுத்தக்கூடாது. சிருஷ்டிப்பில் எந்த பெண்குலமும் விபசாரம் செய்ய முடியாது. ஆனால் மனுக்குலத்தில் ஒரு ஸ்திரீ மட்டுமே தன் கற்பை கறைப்படுத்தி விபசாரம் செய்ய முடியும். விபசாரத்தில் அவள் விழுந்துபோவாள் என்பதை தேவன் முன் அறிந்திருந்தார். ஆதலால் தான் சிருஷ்டிப்பில் மனுக்குலத்தில் உள்ள பெண் மட்டுமே மூலசிருஷ்டிப்பில் இல்லை. சிருஷ்டிப்பில் இதர பெண்குலங்கள் அனைத்தும் மூலசிருஷ்டிப்பில் உள்ளது. ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டான், ஏவாள் உருவாக்கப்பட்டாள். சிருஷ்டிப்பு ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்று சிருஷ்டிக்கப்படுவதாகும். உருவாக்கப்படுதல் சிருஷ்டிக்கப்பட்ட ஒன்றிலிருந்து ஒன்றை உருவாக்குவதாகும்.

21. ஒரு ஸ்திரீ தன் கற்பை கறைப்படுத்தினால் அவள் தன் வாழ்நாள் முழுவதும் கறைப்பட்டவளே. அவளுடைய கற்புக்குலைச்சல் எவ்வளவுதான் மன்னிக்கப்பட்டாலும் அது நீதியாக முடியாது. இதுக் குறித்து செய்தி இவ்வண்ணமாகக் கூறுகிறது. **ஒரு ஸ்திரீ கறைப்படுத்தப்படக்கூடாத குணாதிசயங்களை உடையவளாயிருக்கிறாள். அவள் இதில் குறைவு கொண்டு வருவாளாகில் தன் ஜீவிய காலமெல்லாம் கறைபட்டவளாகவேயிருக்கிறாள். எவ்வளவு தான் அவளுக்கு மன்னிக்கப்பட்டாலும், அவள் நீதியாக்கப்பட முடியாது. தன்னை கறைப்படுத்தினதற்காக அவள் மன்னிக்கப்படலாம். ஆனால் அவளுடைய ஜீவியத்தில் அவள் நீதியாகப்பட முடியாது. அது எப்பொழுதும் அவளோடேயிருக்கும்.** (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு. பக்கம் 21. பதிப்பு: ஏழாம் தூதனின் சத்தத்தின் நாட்களிலே)

22. தொடக்கத்தில் ஏதேன் தோட்டத்தில் விபசாரம் நடந்தது. தேவனுடைய வார்த்தையின் மேல் உள்ள அவிசுவாசத்தினால் ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். அவள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் போனதினால் வஞ்சிக்கப்பட்டாள். இதனால் ஜீவன் விதைக்கப்படும் நிலம் - ஸ்திரீயின் சரீரம் கறைப்பட்டது. இது மனுக்குலம் முழுவதையும் கறைப்படுத்தியது. ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது. ரோ.5:12. ஒரே மனுஷனுடைய கீழ்படியாமையினாலே அநேகர் பாவிகளானார்கள். ரோ.5:19. ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கேதுவான தீர்ப்பு உண்டாயிற்று. ரோ.5:18. ஏவாள் தவறு செய்ய நினைக்கவில்லை. ஆனால் அவள் வஞ்சிக்கப்பட்டாள். வஞ்சிப்பு மனப்பூர்வமாக ஒருவர் செய்யும் செயல் அல்ல. அவள் ஏமாற்றப்பட்டு ஒன்றை செய்ய தூண்டப்பட்டாள். ஆக அவளுடைய கீழ்படியாமையினால் பாவம் உலகத்தில் பிரவேசித்தது. தேவனுடைய வார்த்தையின் மேல் உள்ள அவிசுவாசமே பாவம். ரோ.14:23.

23. இதோ, மலடிகள் பாக்கியமுள்ளவர்கள் என்றும், பிள்ளைபெறாத கர்பங்களும் பால் கொடாத முலைகளும் பாக்கியம் என்று சொல்லப்படும் நாள் வரும். லூக்.23:27-31. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் இதுவே. பிள்ளைப் பெறுவது இன்று ஒரு அவமானமாகயிருக்கிறது. இதனால் அவள் ஏமாற்றப்பட்டு, கற்பத்தடை செய்ய தூண்டப்படுகிறாள். இது என்ன? ஒரு வஞ்சிப்பு. கற்பத்தடை தேவனுக்கு விரோதமானது. ஆனாலும் அவளுடைய சுபாவம் மாறுவதில்லை. அவள் தன் புருஷனுக்கு பிள்ளைகளைப் பெற விரும்பவில்லை. ஆதலால் அவள் ஒரு நாயையோ அல்லது ஒரு பூனையையோ அல்லது ஏதோ ஒரு வீட்டுப்பிராணியையோ வளர்க்கிறாள். அவள் எதற்காவது தாயாக இருக்க வேண்டும். அது அவளுடைய சுபாவம். அவள் தன்னுடைய வயிற்றில் ஒரு பிள்ளையை பெற்று அதை வளர்க்க விரும்பவில்லை. மாறாக ஒரு வீட்டுப் பிராணியை வளர்க்க விரும்புகிறாள். அது அவளுக்கு தேவன் கொடுத்த சுபாவம். அந்த சுபாவம் அவளோடு ஒன்றாக இணைந்த ஒன்று. ஆனால் அவள் ஒன்றை வளர்ப்பதற்கு பதிலாக மற்றொன்றை வளர்த்து பிசாசுக்கு அடிமையாகிறாள். ஆதியில் ஏவாள் வஞ்சிக்கப்பட்டது போல இவளும் இக்காலத்தில் வஞ்சிக்கப்படுகிறாள்.

24. இந்த பூமியில் ஒருவன் பிறக்கும் போது ஆதாமுக்குள் பிறக்கிறான். இது இயற்கையான பிறப்பு. என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். சங்.51:5. நமது பெற்றோர்களின் இயற்கையான மாம்ச இச்சையினால் ஏற்பட்ட உறவினால் நாம் பிறந்தோம். ஆதலால் இது பாவத்தோடும் மரணத்தோடும் சம்பந்தப்பட்டது. இந்த சுபாவத்தின்படி நமது ஆசைகள், வாஞ்சைகள் யாவும் இந்த உலகத்தின் ஒரு பாகமாகயிருக்கிறது. அதாவது நாம் இயற்கையின் ஒரு பாகமாக இருக்கிறோம். இந்த உலகத்தின் சுபாவம் நம்முடைய முதல் புருஷன். ஆதலால் உலயத்தின் சுபாவம் நம்மில் மரிக்கவேண்டும். அப்படியானால் நாம் உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகளிலும் அன்புகூரக் கூடாது. மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தன் பெருமை உலகத்தினால் உண்டானவைகள். 1யோ.2:15,16.

25. நீங்கள் மாம்சத்தின் கிரியைகளுக்கு மரிக்க வேண்டும். அதாவது:

1. விபசாரத்திற்கு நீ மரிக்க வேண்டும்.
2. வேசித்தனத்திற்கு நீ மரிக்க வேண்டும்.
3. அசுத்தத்திற்கு நீ மரிக்க வேண்டும்.
4. காமவிகாரத்திற்கு நீ மரிக்க வேண்டும்.
5. பில்லி சூனியத்திற்கு நீ மரிக்க வேண்டும்.
6. பகைகளுக்கு நீ மரிக்க வேண்டும்.
7. விரோதங்களுக்கு நீ மரிக்க வேண்டும்.
8. விக்கிரகாராதனைக்கு நீ மரிக்க வேண்டும்.
9. கோபங்களுக்கு நீ மரிக்க வேண்டும்.
10. சண்டைகளுக்கு நீ மரிக்க வேண்டும்.
11. பிரிவினைகளுக்கு நீ மரிக்க வேண்டும்.
12. மார்க்கபேதங்களுக்கு நீ மரிக்க வேண்டும்.
13. பொறாமைக்கு நீ மரிக்க வேண்டும்.
14. கொலைகளுக்கு நீ மரிக்க வேண்டும்.
15. வெறிகளுக்கு நீ மரிக்க வேண்டும்.
16. களியாட்டுகளுக்கு நீ மரிக்க வேண்டும்.
17. அநியாயத்துக்கு நீ மரிக்க வேண்டும்.
18. திருட்டுத்தனத்திற்கு நீ மரிக்க வேண்டும்.
19. உதாசினத்தற்கு நீ மரிக்க வேண்டும்.
20. கொள்ளைக்கு நீ மரிக்க வேண்டும்.
21. சுயபுணர்ச்சிக்கு நீ மரிக்க வேண்டும்.
22. ஆண்புணர்ச்சிக்கு நீ மரிக்க வேண்டும்.
23. பொய்க்கு நீ மரிக்க வேண்டும்.
24. துன்மார்க்க இச்சைகளுக்கு நீ மரிக்க வேண்டும்.
25. மாம்சத்தின் இச்சைக்கு நீ மரிக்க வேண்டும்.
26. கண்களின் இச்சைக்கு நீ மரிக்க வேண்டும்.

27. ஜீவனத்தின் பெருமைக்கு நீ மரிக்க வேண்டும். 28. வைராக்கியத்திற்கு நீ மரிக்க வேண்டும்.
29. புறங்கூறுதலுக்கு நீ மரிக்க வேண்டும். 30. கோள்சொல்லுதலுக்கு நீ மரிக்க வேண்டும்.
31. இறுமாப்புக்கு நீ மரிக்க வேண்டும். 32. கலகங்களுக்கு நீ மரிக்க வேண்டும்.
33. வாக்குவாதங்களுக்கு நீ மரிக்க வேண்டும். 34. வஞ்சகத்திற்கு நீ மரிக்க வேண்டும்.
35. விக்ரகாராதனையாகிய பொருளாசைக்கு நீ மரிக்க வேண்டும். கலா.5:19-21, 1கொரி.6:9,10, எபே.5:5, வெளி.22:15, 1யோ.2:16, 2கொரி.12:20.

26. உன்மேல் ஆளுகையுடைய உலக சுபாவம், உன்னுடைய முதல் புருஷன், உன்னுடைய இயற்கையான பிறப்பின் மூலம் அது உன்னுடைய சுபாவமாயிருக்கிறது. நீ அந்த சுபாவப்படி உலகத்தை நேசிக்கிறாய். ஏனென்றால் நீ உலகமும், உலகத்தின் ஒரு பாகமுமாயிருக்கிறாய். ஆதலால் உன்னில் உள்ள உலகத்தின் சுபாவம் மரிக்க வேண்டும். **உன்னில் உள்ள உலக சுபாவத்தின் ஒவ்வொரு அணுவும் மரிக்க வேண்டும்.**

27. **உலக மக்கள் யார்?** இம்மைக்குரிய நன்மைகளுக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை உள்ளவர்கள். 1கொரி.15:19. உலகம் கொடுக்கிற ஐசுவரியத்தையும், ஆசீர்வாதத்தையும் நம்பி, தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் என எண்ணி தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்ளும் ஒரு கூட்டம். இவர்கள் இம்மையில் தங்கள் பங்கை பெற்றுள்ளவர்கள். இந்த உலக ஆஸ்தி, சுகத்தைப் பெற்றுள்ளவர்கள். இவர்கள் வயிற்றை அவர் தமது திரவியத்தினால் நிரப்புகிறார். ஆதலால் இவர்கள் புத்திர பாக்கியத்தினால் திருப்தியடைந்து தங்களுக்கு மீதியான பொருளை தங்கள் குழந்தைகளுக்கு வைக்கிறார்கள். சங்.17:14யை தியானியுங்கள். பணத்தையே தங்கள் வாழ்நாட்களின் லட்சியமாகக் கொண்டு, பணத்தை சேகரித்து, தங்கள் பிள்ளைகளுக்கு வைத்து செல்லுகிறார்கள். வீட்டுக்கு மேல் வீட்டை கட்ட வேண்டும், சொத்துக்கு மேல் சொத்தை சேர்க்க வேண்டும், மகள் கல்யாணத்திற்கு பத்து லட்சம் சேர்த்து வைக்க வேண்டும், மகன் கலியாணத்திற்கு பின் சுகபோகமாக வாழ ஆஸ்திகளை சேர்த்து, வங்கிகளில், எல்.ஐ.சிகளில் பணம் போட்டு வைக்க வேண்டும். பணத்தின் வாயிலாக உன் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். கூட்ட விளம்பர கைப்பிரதிகளில் உன் பெயரைப் போட்டு கௌரவப்படுத்தினால், கூட்டம் நடத்துகிறவர்களுக்கு ஒரு தொகையை காணிக்கையாகக் கொடுத்து அவர்களையே நேசிக்க வேண்டும். உன்னுடைய இந்த செயல் அனைத்துமே உலகத்தின் ஸ்தாபனசபை ஆவிகளால் ஆளுகை செய்யப்பட்டு வருகிறது. உன்னை நேசிக்கிறவர்களையே நீ நேசித்து, உனக்கு பிரியமானவர்களையே நீ வாழ்த்துவாயானால் நீ ஒரு ஆயக்காரன் அல்லவா. பாஸ்டர் பதவி உனக்கு ஒரு கேடா?. கர்த்தர் உன்னோடு இடைபடுகிறார் என்கிறாய். அவர் நல்லோர் மேலும், தீயோர் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிற நீதியுள்ள தேவன் என்பதை மறந்துவிடாதே. மத்.5:45. அவர் தமது காரியங்களை ஒரு மிருகத்தைக்கொண்டும், பொய்யின் ஆவிகளைக்கொண்டும் செய்கிறவர் என்பதை நீ அறிவாயா? ஆதலால் உன்னையே நீ சீர்தூக்கிப் பார்த்து மனந்திரும்பு.

28. **இந்த உலகத்தில் விருத்தியடைகிறவர்கள் யார்?** துன்மார்க்கர்கள். இவர்கள் ஆஸ்திகளை நாளுக்கு நாள் பெருகப்பண்ணுகிறார்கள். தியானி சங்.73:12. These are ungodly, who prosper in the world, they increase in riches. இந்த உலகம் இவர்கள் உள்ளத்தில் உள்ளது. பிரச.3:11. பணத்தை இச்சையினால் சேமித்து வைக்கிறவனுக்கு எவ்வளவு சேமித்தாலும் போதும் என்ற திருப்தி ஏற்பட பணமானது பெருந்தடையாயிருக்கிறது. பிரச.5:10. இந்த உலகத்தின் அதிபதி சாத்தான். யோ.14:30, லூக்.4:6. இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. 1யோ.5:19. ஆம் மேற்கூறியவர்கள் இவனுடைய ராஜ்யத்துக்குரியவர்கள், இம்மைக்குரியவர்கள், இப்பிரபஞ்சத்துக்குரியவர்கள்.

29. **உலக ஆஸ்திக்கும், கிறிஸ்தவ சகோதரத்துவத்துக்கும் உள்ள தொடர்பு என்ன?** தன் சகோதரன் தேவையில் இருக்கும்போது அத்தேவையை பூர்த்திச் செய்வதற்குத் தன் ஆஸ்தியை உபயோகிக்க முன் வராத ஒருவனில் கிறிஸ்தவ சகோதரத்துவத்தின் அடிப்படையான தெய்வீக அன்பு இல்லை. தேவையுள்ளவர்களின் குறைவை நிவர்த்தி செய்வதே உண்மையான கிறிஸ்தவ சகோதரத்துவம். அப்.2:45, 4:32. ஒருவனை அடிமையாக்குவதற்கும், அவன் மேல் தங்கள் செல்வாக்கை செயல்படுத்தவுமே இன்று ஐசுவரியவான்கள், வசதிபடைத்த பாஸ்டர்கள் நினைக்கிறார்கள். இவர்கள் தங்கள் செல்வாக்கை பாதுகாக்கவும், சுயபாதுகாப்பை உறுதிப்படுத்தவும் பணத்தை ஒரு கருவியாக உபயோகிக்கிறார்கள்.

30. ஒருவன் இந்த உலகத்திற்கு மரிக்க வேண்டும். அதாவது அவனுடைய முதல் கணவனாகிய இந்த உலக சுபாவத்துக்கு மரிக்க வேண்டும். பின், கிறிஸ்து என்னும் வேறொருவருடையவனாவதற்கு மறுபடியும் பிறக்க வேண்டும். யோ.3:5. நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும். யோ.3:7. மாம்சத்தில் பிறந்தது மாம்சமாயிருந்தது. இப்பொழுது ஆவியில் பிறப்பது ஆவியாயிருக்கிறது. யோ.3:6.

31. நீங்கள் வேறொரு சுபாவத்துடன் இணைபட வேண்டும். அதாவது ஒரு சுபாவம் மரித்து, அதிலிருந்து விடுதலையாகி, மற்றொரு சுபாவத்துடன் இணைக்கப்பட வேண்டும். நீங்கள் ஒரு கலப்பட பிறவியாக இருக்க முடியாது, கூடாது. அதாவது ஒருவன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்போது, அவன் தன் உலக சுபாவத்துக்கு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, ஒரு புது ஆவிக்குரிய இணைப்புக்குள் வருகிறான். ரோ.6:1-5, கொலே.2:12. இது பழைய ஜீவியத்தின் அடக்கம், புது ஜீவியத்தின் தொடக்கம். இது முதலாம் புருஷனின் மரணம், இரண்டாம் புருஷனோடு செய்யும் நல்மனசாட்சியின் உடன்படிக்கை. புதிய மனுஷனைத் தரித்துக்கொண்ட பிறகு பழைய மனுஷனுக்கு அங்கு இடமேயில்லை. இது முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனைக் களைந்து போட்டு, உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வதாகும். எபே.4:22-24. அதாவது மாம்சத்தின் கிரியைகளுக்கு மரித்து, மெய்யான திராட்சைச் செடியாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் கொடியாக நிலைத்திருந்து கனிகொடுக்கும் செய்கையாகும். ஆவியின் கனிகளையுடைய செயலாகும். ஆவியின் கனிகள் : 1. அன்பு 2. சந்தோஷம் 3. சமாதானம் 4. நீடிய பொறுமை 5. தயவு 6. நற்குணம் 7. விசுவாசம் 8. சாந்தம் 9. இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கலா.5:19-23. நீங்கள் ஆவியினால் நடத்தப்படுவீர்களானால் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்பட்டவர்கள் அல்ல. கலா.5:18.

32. ஒருவன் முதலாம் சுபாவத்துடன் பிறந்தபோது, அவனுடைய பெயர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டது. இந்த சுபாவத்தைக் கொண்டு நீங்கள் செய்த செயல்கள் அனைத்துமே ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் யார் யார் பெயர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் உள்ளதோ அவர்கள் மட்டுமே இந்த புதிய இணைப்புக்குள் வருவார்கள். ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் காணப்படும் பெயர்கள் உலகத்தோற்றத்துக்கு முன்பே கிறிஸ்துவுக்குள் முன்னறிந்து, முன்குறிக்கப்பட்டு எழுதப்பட்டதாகும். ஆதலால் இதிலிருந்து அவர்கள் பெயரை எக்காரணம் கொண்டும் ஒருக்காலும் எடுத்துப்போட முடியாது.

33. இந்த பதிய இணைப்புக்குள் வரும்பொழுது நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவராகிறீர்கள். கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களாகிறீர்கள். இப்பொழுது உங்களில் நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவநீதி செயல்படுகிறது. ரோ.3:21. இப்பொழுது நீங்கள் இந்த உலகத்துக்குரியவர்கள் அல்ல. யோ.17:16. இந்த உலகம் உங்களுக்கு பாத்திரமாயிருக்காது. எபி.11:38. இந்த உலகம் உங்களை அறியாது. யோ.1:10, 1யோ.3:1.

34. தன் புருஷன் உயிரோடிருக்கையில் ஸ்திரீ வேறொருவனை விவாகம் பண்ணினால் அவள் விபசாரி. புருஷன் மரித்த பின்பு அவள் அவனுடைய பிரமாணத்திலிருந்து விடுதலையானபடியினால் வேறொருவனை விவாகம் பண்ணினாலும் அவள் விபசாரியல்ல. ஆதலால் நீங்கள் உலகப்பிரகாரமாக வாழ்ந்து ஜீவித்து, உலகத்தின் சுபாவங்களை உடையவர்களாயிருந்து, உங்கள் மாம்ச இச்சைகளின்படியே நடந்து, மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்திலே கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்து, உலகத்தினால் உங்களை கறைப்படுத்தி, இப்பிரபஞ்ச கவர்ச்சிக்கு உங்களை அடிமையாக்கி, இவ்வுலகத்திற்குரிய வேஷந்தரித்து; நான், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுவிட்டேன் கிறிஸ்துவை தரித்துக்கொண்டேன், இப்பொழுது நான் இக்காலத்துக்குரிய செய்தியை பெற்றுக்கொண்டேன், ஆதலால் நான் அவருடைய மணவாட்டி என்று கூறிக்கொண்டிருப்பாயாகில், நீ ஒரு ஆவிக்குரிய விபசாரி. ஏனென்றால் நீ இன்னும் உலகத்தில் உண்டான கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமையான கேட்டுகளுக்கும், அசுத்தங்களுக்கும் தப்பவில்லை. ஏனென்றால் நீ இன்னும் உலக சுபாவத்துக்கு மரிக்கவில்லை. நீ ஒருபுறம் உலக சுபாவத்துக்கு ஜீவித்து, அதே நேரத்தில் மறுபடியும் இயேசு கிறிஸ்துவை உன் மணவாளனாக பாவித்து, அவருடைய மணவாட்டி என நினைத்துக்கொள்வதால் நீ ஒரு ஆவிக்குரிய விபசாரி. ஏனென்றால் நீ ஒரே நேரத்தில் இரு புருஷர்கள் மீது உரிமை கொண்டாடுகிறாய். ஒன்று உலக சிநேகம் (சாத்தான்) மற்றொன்று கிறிஸ்து.

35. லவோதிக்கேயா சபைதூதன் கொடுத்த செய்தியை ஏற்றுக்கொண்டோம், அதில் நிலைத்திருக்கிறோம், அதன்படி ஜீவிக்கிறோம், அதை உபதேசிக்கிறோம் எனக் கூறும் கூட்டத்தினரில் அது பாஸ்டராக இருந்தாலும் சரி அல்லது விசுவாசியாக இருந்தாலும் சரி. பெரும்பான்மையானவர்கள் ஆவிக்குரிய விபசாரத்தில் தான் காணப்படுகிறார்கள். ஏனென்றால் இவர்கள் ஜீவியத்தில் 1) விசுவாசமில்லை 2)தைரியமில்லை 3) ஞானமில்லை 4) இச்சையடக்கமில்லை 5) பொறுமையில்லை 6) தேவபக்தியில்லை 7) சகோதர சிநேகமில்லை 8) அன்பில்லை 9) சந்தோஷமில்லை 10) சமாதானமில்லை 11) நீடிய பொறுமையில்லை 12) தயவு இல்லை 13) நற்குணமில்லை 14) சாந்தமில்லை. 2பேது.1:5-7, கலா.5:22-23.

36. பாஸ்டர்கள் பணம் சம்பாதிக்கவே ஊழியம் செய்கிறார்கள். 1) பாஸ்டருக்கு அரசாங்க உத்தியோகம் மற்றும் காணிக்கை தசமபாக வரவு. 2) நல்ல தொழில் மற்றும் காணிக்கை தசமபாகம் வரவு. 3) அரசாங்க உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றபின் ஒரு நல்ல ஓய்வு கால ஊதியம் மற்றும் காணிக்கை தசமபாகம் வரவு. இவர்கள் யாவரும் கர்த்தருக்குரிய தசமபாகத்தை அனுபவிப்பதற்கு முற்றிலும் தகுதியற்றவர்கள். ஊழியர்கள், தங்கள் உள்ளத்தை பணமானது கொள்ளைகொள்ள இடம் கொடுக்கும் போது தெய்வபயமானது அவர்களிடமிருந்து மறைந்து விடுகிறது. கூலிக்கு உபதேசிக்கிறார்கள், பணத்துக்கு குறிசொல்லுகிறார்கள், காணிக்கை கிடைக்கும் இடங்களுக்கு மட்டுமே சென்று சுகநலம் விசாரிக்கிறார்கள், ஜெபம் பண்ணுகிறார்கள். ஏழை எளிய விசுவாசிகளுடைய இல்லங்கள் எங்கிருக்கிறது என்றே அவர்களுக்கு தெரியவில்லை. ஆகிலும் அவர்கள் கர்த்தரை சார்ந்துகொண்டும், கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள் மேல் வராது என்கிறார்கள். மீகா.3:11. பாருங்கள் முற்றிலுமாக கர்த்தரையே சார்ந்து ஊழியம் செய்கிற ஊழியக்காரனை காண்பது அறிதாக இருக்கிறது. மேற்கூறிய தகுதிகளைக் கொண்ட ஊழியக்காரர்கள் அனைவரும் மாய்மாலக்காரர்களே, கள்ள கபடமுள்ள வேலையாட்களே, ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்தவர்களே.

37. சிலர் ஊழியத்தின் பெயரில் கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்குகிறார்கள். பாருங்கள் நான் ஊழியத்திற்கு அதை, இதைச் செய்கிறேன் என்கிறார்கள். ஆனால் தன் வீட்டில் வேலை செய்கிறவன் வீட்டில் அடுப்பு எரியாததை அவர்கள் கண்டுகொள்வதேயில்லை. பிரியமானவர்களே எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. பாஸ்டர், ஊழியக்காரன் தொழிலில் பல ஆண்டுகளுக்குள் கோடீஸ்வரனாகிவிட்டார்கள். ஆனால் அவரைச் சார்ந்து உடன் வேலை செய்கிறவன் பல ஆண்டுகளாயும் அந்த பழைய ஏழ்மை நிலையிலேயே இருக்கிறான். அவன் வாழ்க்கையில் மாற்றம் இல்லை.

38. பாஸ்டர் என்கிறான், தனது சாதூர்யமான பேச்சினால் மக்களை ஆதாயப்படுத்துகிறான். தனது தாழ்மையினால் மக்களை கவர்ச்சி செய்கிறான், கூட்டத்தைச் சேர்க்கிறான். தனது உறவினர்களை ஒன்று சேர்க்கிறான். தனக்கு வீடு, கார், சபைக்கு கட்டிடம் கட்டுகிறான். அனைத்தையும் தன் பெயரிலே பதிவு செய்து கொள்கிறான். தனது வாரிசை தனக்குப் பின் தன் ஊழியத்திற்கு தயார் செய்து, சம்பாதித்ததை தக்க வைக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறான். ஆனால் ஏமாளிகள் ஏமாந்துகொண்டு தான் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து சிலர், சகோதரனே பாஸ்டரிடத்தில் குறைவுகள் அதிகமிருந்தாலும் அவர் செய்தி நன்றாகக் கொடுக்கிறார் என்கிறார்கள். நம்முடைய தீர்க்கதரிசி இதுக்குறித்து: **சகோ.நெவில் பேசுவதைக் கேட்க நான் விரும்புகிறதற்குள்ள காரணத்தை உங்களுக்குக் கூறுகிறேன். முக்கியமாக அவர் ஒரு நல்ல பிரசங்கியார் என்பதற்காக அல்ல, ஆனால் அவர் என்ன பிரசங்கிக்கிறாரோ அதன்படி அவர் ஜீவிக்கிறார் என்று நான் அறிந்துள்ளதே அதன் காரணமாய் இருக்கிறது. நீங்கள் எனக்கு ஒரு பிரசங்கத்தை செய்வதைக் காட்டிலும் நீங்கள் எனக்கு ஒரு பிரசங்கமாக ஜீவிப்பதையே நான் விரும்புகிறேன். அது அதிக பலனுள்ளதாயிருக்கும்.**

39. ஒருவன் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து வாழ்வதிலிருந்து தவறிப்போக ஐசுவரியத்தின் மயக்கமே காரணமாயிருக்கிறது. ஐசுவரியத்தின் மயக்கம் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால் அவன் பயனற்றுப் போகிறான். மத்.13:22. குளிருமின்றி, அனலுமின்றி வெது வெதுப்பாயிருக்கிற இந்த ஜனங்களுக்கு தங்கள் வாழ்க்கை எப்படியிருந்தாலும் பரவாயில்லை, ஞாயிறு தோறும் ஏதோ ஒரு ஆராதணைக்குச் செல்ல வேண்டும், காணிக்கை தசமபாகம் கொடுக்க வேண்டும், அதோடு தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை முடிந்தது என நினைக்கிறார்கள். ஒரு பாரம்பரிய வாழ்க்கை வாழ்கிறார்கள். முடிவில் வழிநடத்தியவன் மடிந்துபோகிறான். அவனை நம்பியிருந்த இவர்களும் மடிந்து போகிறார்கள். அது தான் இவர்கள் ஜீவியம், இவர்களது கதி.

40. ஆதியில் சென்னை, பல்லாவரம் பகுதியில் ஒரு சபை மட்டும் தான் இருந்தது. அதன் பின்பு அந்த சபையிலிருந்து விசுவாசிகள் பலர் பிரிந்து சென்று தங்களை மூப்பர்களாக்கிக் கொண்டார்கள். மூப்பர்கள் பிரிந்து சென்று தங்களை பாஸ்டர்களாக்கிக் கொண்டார்கள். இப்படியாக நாளுக்கு நாள் சபை உடைந்து உடைந்து இன்று குறைந்தது பத்துக்கும் மேற்பட்ட சபைகள் ஆங்காங்கு சந்து பொந்துக்களில் காணப்படுகிறது. சென்னை, பல்லாவரம் ஒரு ஆவிக்குரிய சிகப்பு விளக்கு (Red light area-விபசாரப் பகுதி) பகுதியாகக் காணப்படுகிறது. பாஸ்டர் ஆனவர்கள் எப்படியாவது தங்களுக்கு முன் உட்கார ஒரு சில ஆத்துமாக்களை தக்க வைத்துக்கொண்டு, அதைக்கொண்டு பக்க தொழில் செய்து வருகிறார்கள். பக்க தொழிலில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு சிலர் சொத்து சுகங்களை சேர்க்கிறார்கள், சிலர் தங்கள் வீட்டு சில்லறை செலவுகளை சமாளித்துக் கொள்ளுகிறார்கள். சபையை சத்தியத்திற்குள் வழிநடத்த தகுந்த உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன் இல்லை. எங்கும் எதிலும் மாய்மாலம். ஒவ்வொருவரும் அவரவர்கள் மனம்போன போக்கில் நடக்கிறார்கள். சபையில் ஒழுக்கமில்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் சுயஇச்சைகளுக்கேற்ற போதனைகளைக் கொண்டுள்ளார்கள். ஆனாலும் சபையானது சீர்திருத்தலுக்குரிய இடம், இங்கு வந்து நம்முடைய தவறுகள், குறைகள் கண்டிக்கப்பட்டு, அவைகளை நாம் சரிசெய்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிற ஒரு சிலர் உண்டு.

41. பொதுவாகக் கூறினால் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் எனக் கூறுகிறவர்கள் இந்த உலக சுபாவத்துடன் தங்களை இணைத்துக்கொண்டு அதற்கு இன்னும் மரிக்காது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுவிட்டேன், இயேசு கிறிஸ்துவை தரித்துக்கொண்டேன், இதோ பறந்துவிட ஆயத்தமாயிருக்கிறேன் என்று கூறி தேவனிடத்தில் உரிமை கொண்டாடினாலும் அவர்கள் உலகப்பிரகாரமான வாழ்க்கை வாழ்ந்து ஒரு ஆவிக்குரிய விபசாரிகளாகவே காணப்படுகிறார்கள். ஆதலால் பிரியமானவர்களே உங்களை நீங்களே நிதானித்துப் பார்க்கவேண்டிய காலக்கட்டத்தில் இருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து உங்களை தேவனுடைய வார்த்தையைக் கொண்டும், இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டும் சீர்தூக்கிப் பார்த்து நலமானதைப் பற்றிக்கொள்ள கர்த்தர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

42. பிரியமானவர்களே, அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயுக்கு, தீத்துக்கு எழுதின நிருபங்கள் பொதுவாக பாஸ்டர்களுக்கான நிருபங்கள். ஆதலால் இவைகள் Pastoral Epistles என அழைக்கப்படுகிறது. இவைகள் பிரதானமாக சபை பாஸ்டர்களுக்கான வழிமுறைகள் (Directions) மற்றும் அவர்களுக்கடுத்த பணிகள் குறித்து எழுதப்பட்டுள்ளது. ஆதலால் பாஸ்டர்கள் இந்த நிருபத்தில் கூறப்பட்டுள்ள தகுதியுடையவர்களாகக் காணப்படுகிறார்களா என்று அவர்களை சீர்தூக்கிப் பார்த்து, தகுதியுடையவர்களாகக் காணப்படுபவர்களிடமே ஐக்கியம் வைத்துக் கொள்ளுங்கள், உங்களை காத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் கள்ள கபடமுள்ள பாஸ்டருக்குள் இருக்கும் ஆவியே உங்களையும் ஆட்கொள்ளும்.

43. நீங்கள் உண்மையாகவே உங்கள் பாவங்களுக்கு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தால் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள். கிறிஸ்து சிலுவையில் நமக்கென்று சாபமாகி நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்டார். இவ்வாறாக கிறிஸ்து சிலுவையின் மூலமாய் நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். கலா.3:13, ரோ.10:4, 2கொரி.5:21, கொலோ.2:14.

44. இந்த உலக சிநேகத்துக்கு நீங்கள் மரிக்கவில்லையானால் கிறிஸ்து என்கிற வேறொரு புருஷனுக்குரியவர்கள் அல்ல. நீங்கள் இந்த உலக சுபாவத்துக்கு மரிக்காத நிலையில் உங்கள் முதல் புருஷன் மரிக்கவில்லை. இந்நிலையில் நீங்கள் கிறிஸ்துவிடம் உரிமை கொண்டாடுவீர்களானால் நீங்கள் ஆவிக்குரிய விபசாரம் செய்கிறீர்கள். இந்த உலகத்தினால் கறைபடாதபடிக்கு ஒருவன் தன்னைத் தானே காத்துக்கொள்வதே மாசில்லாத சுத்தமான பக்தி. யாக்.1:27, 1யோ.2:15,16.

45. நியாயப்பிரமாணத்துக்கு மரிப்பதென்றால், நியாயப்பிரமாணமின்றி வாழ்வது அல்ல. கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு உட்பட்டிருப்பதாகும். 1கொரி.9:21. உலக சுபாவமாகிய முதல் புருஷன் உங்களில் மரித்தால், கிறிஸ்து என்கிற வேறொரு புருஷனுடையவர்களாய் அவருடைய பிரமானத்துக்கு உட்படுகிறீர்கள். **கிறிஸ்துவின் பிரமாணம் என்ன?** நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்க வேண்டும் என்பதாகும். யோ.15:12. **அன்பு** - இதற்குள் நியாயப்பிரமாணம் முழுவதும் அடங்கியிருக்கிறது. ரோ.13:9. **அன்பு** - இது ராஜரீகப்பிரமாணம். யாக்.2:8, கொலோ.3:14,15. நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு. 2யோ.:6.

1. நீ மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும் உன்னிடம் அன்பு இல்லையானால் நீ சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பாய்.
2. நீ தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்தாலும், சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்திருந்தாலும், மலைகளை பெயர்க்கத்தக்க விசுவாசம் உள்ளவனாக இருந்தாலும் அன்பு உன்னிடத்தில் இல்லாவிட்டால் நீ ஒன்றுமில்லை.
3. நீ உன்னுடைய சொத்துக்களையும், ஆஸ்திகளையும் அன்னதானம் பண்ணினாலும், உன் சரீரத்தை சுட்டெரிக்கப்படுவதற்காகக் கொடுத்தாலும் உன்னிடத்தில் அன்பு இல்லாவிட்டால் உனக்கு பிரயோசனம் ஒன்றுமில்லை.
4. அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளது.
5. அன்புக்கு பொறாமையில்லை.
6. அன்பு தன்னை புகழாது.
7. அன்பு இறுமாப்பாயிராது.

8. அன்பு அயோக்கியமானதைச் செய்யாது. 9. அன்பு தற்பொழிவை நாடாது.
10. அன்பு சினமடையாது. 11. அன்பு தீங்கு நினையாது.
12. அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது. 13. அன்பு சத்தியத்தில் சந்தோஷப்படும்.
14. அன்பு சகலத்தையும் தாங்கும். 15. அன்பு சகலத்தையும் விசுவாசிக்கும்.
16. அன்பு சகலத்தையும் நம்பும். 17. அன்பு சகலத்தையும் சகிக்கும்.
18. அன்பு ஒருக்காலும் ஒழியாது.

இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது. 1கொரி.13:1-8,13. அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவேயிருக்கிறார். 1யோ.4:7,8. ஆதலால் என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூறக்கடவோம். 1யோ.3:18.

46. முடிவாக பிரியமானவர்களே உங்களையே நீங்கள் சோதித்தறிந்து, நீங்கள் இந்த உலக சுபாவத்துக்கு மரித்து, நீங்கள் சார்ந்திருக்கிற ஸ்தாபனசபை பாரம்பரியங்களுக்கு மரித்து, கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகிவிட்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாகிவிட்டால், உங்களிடம் உலகசுபாவம், மாம்ச கிரியைகள், ஸ்தாபசபைக்கடுத்த பாரம்பரியங்கள் எதுவும் காணப்படக்கூடாது. உங்களிடம் ஆவிக்குரிய ஒன்பது கனிகள் காணப்பட வேண்டும். சத்தியத்தை கேட்பதோடு மட்டுமல்ல, அதை விசுவாசிப்பதோடு மட்டுமல்ல, அதன்படி நடந்து கனிகொடுப்பவர்களாக, செடியாக கிறிஸ்துவில் கொடியாக நிலைத்திருந்து கனி கொடுப்பவர்களாகக் காணப்படவேண்டும். இதுவே நீங்கள் கிறிஸ்து என்னும் வேறொரு புருஷனுக்குரியவர்களாகிவிட்டீர்கள் என்பதற்கு அடையாளம். அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள்.

47. ஒரு புறாவையும், காகத்தையும் பாருங்கள். காகம் நாள் முழுவதும் கோதுமையை சாப்பிட முடியும். அதே நேரத்தில் அங்கிருந்து பறந்து சென்று, ஒரு செத்த பிணத்தையும் புசிக்க முடியும். ஆனால் புறா, நாள் முழுவதும் கோதுமையை சாப்பிடும். ஆனால் செத்த சடலத்தை அது புசிக்க முடியாது. புறாவிற்கு பித்து (Gale) கிடையாது. அது மரித்த சடலத்தை ஒரு கடி கடித்தால், அது அதனை கொன்றுவிடும். அவ்வண்ணமாகவே ஒரு உண்மையான கிறிஸ்துவனுடைய சுபாவமும் இருக்கிறது. உலகத்தின் காரியங்கள் அவர்களுக்கு தேவையில்லை. உலகசிநேகம் அவர்களுக்கு தேவையில்லை. உலகத்தின் செத்த காரியங்கள் அவர்களுக்கு துர்நாற்றமாக இருக்கும். அவர்கள் தேவனுடைய வார்த்தையை மட்டுமே புசிப்பார்கள். இது குறித்து நீங்கள் தாகம் (19.9.65) என்ற செய்தியில் பத்தி 198-200 வரை தியானிக்கலாம். நீ இக்காலத்துக்குரிய செய்தியையும், ஸ்தாபனசபைகளுக்கடுத்த காரியங்களையும், உலக பாரம்பரிய சடங்காச்சாரங்களையும் கைக்கொண்டு வருவதால் நீ ஒரு காகமே. நீ இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறேன் எனக் கூறிக்கொண்டு ஸ்தாபனத்திலுள்ள ஒரு அவிசுவாசியைத் திருமணம் செய்தால் நீ ஒரு காகமாகும்.

48. **இன்னும் உலக சுபாவம் உங்களுக்குள் குடிகொண்டிருப்பதால்:**

1) உங்களுக்கு டாக்டர் பட்டம் தேவைப்படுகிறது.

2) உங்களுடைய சாதூர்ய பேச்சினாலும், நயவஞ்சகத்தினாலும் விசுவாசத்தில் குறைவுள்ளவர்களை, சத்தியத்தை அறியும் அறிவில்லாதவர்களை ஏமாற்றி உங்களுக்கு வீடுகளையும், சபைக்கு கட்டிடமும் கட்டிக்கொண்டு பல லட்சம் சொத்துக்களை உங்கள் பெயரில் பதிவுசெய்து, அதோடு மட்டுமல்ல அவைகளை தக்கவைக்க புத்திரனையும் பாஸ்டர் ஊழியத்தில் தயார்படுத்துகிறீர்கள்.

3) நீங்கள் இன்னும் உலகசுபாவத்துக்கு மரிக்காததினால் செய்தி மற்றும் டிஸ்கவரி சேனல் என்ற போர்வையில் டிவியை உங்கள் வீட்டில் வைத்து நீங்கள் செய்திகளைப் பார்க்கிறீர்கள். ஆனால் உங்கள் பிள்ளைகள் மாம்ச இச்சைகளைத் தூண்டும் காட்சிகளைப் பார்க்கிறார்கள். உங்களுக்கு பைபிள் படிக்க, தியானிக்க நேரமில்லை. ஆனால் டிவி முன் பலமணி நேரங்கள் உட்கார்ந்து பற்பல காட்சிகளை காண, ரசிக்க நேரமிருக்கிறது.

4) நீங்கள் இன்னும் உலகசுபாவத்துக்கு மரிக்காததால் கர்த்தருக்குரிய தசமபாகத்தை கொடுக்காமல் அவரை கொள்ளையடிக்கிறீர்கள். சகோதரனே உங்கள் வருமானம் என்ன? ரூ.3,000/- சகோதரனே உங்கள் குடும்பச் செலவு என்ன? மாதம் எப்படியும் 7 to 8 ஆயிரங்கள். உன் பேச்சில் உண்மையில்லை. தசமபாகம் கொடுப்பதற்காக உன் வருமானத்தை குறைத்துக் கூறுகிறாய். கர்த்தருடைய வருமானத்தை ஒருவன் தன்னுடையதாக்கிக் கொள்வது கர்த்தருக்கே மாத்திரம் உரிமையுள்ளதை அபகரித்துக்கொள்வதாகும். யூதாஸ் ஒரு திருடன் நீயும் ஒரு திருடன்.

5) நீங்கள் இன்னம் உலகசுபாவத்துக்கு மரிக்காததினால் எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராத பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் புகுந்து சிஷ்டர், சிஷ்டர் எனக் கூறி அவர்களை வசப்படுத்தி உங்கள் சபைகளை பெண்களால் நிரப்புகிறீர்கள். அவர்கள் தங்கள் புருஷர்களுக்கு தெரியாமல் காணிக்கை தசமபாகம் கொண்டு வந்து உங்கள் வயிற்றை, உங்கள் வீட்டை நிரப்புகிறார்கள்.

6) சகோ.காலேப் யோசுவா சபைகளை உடைக்கிறார் உடைக்கிறார் என்ற பல்லவியை திரும்பத் திரும்ப பாடியே விசுவாசிகளை ஏமாற்றி, உங்கள் தவறுகள், உங்கள் ஏமாற்று வித்தைகளை அம்பலம் ஆகாதபடி பார்த்துக்கொண்டு உங்கள் சம்பாத்தியத்தை தக்க வைத்துக்கொள்ள நாடகம் ஆடுகிறீர்கள்.

7) திருமணம் ஆகாத நீ தேவனுடைய சபையை பக்திவிருத்தியடைய வழி நடத்துகிறேன் என்கிறாய். கள்ள கபடமுள்ள வேலையாளே, தேவனுடைய சபையை விசாரிக்கிறவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறிந்தவனாக இருக்க வேண்டும் அல்லவா? 1தீமோ.3:5. திருமணம் ஆகாத நீ, சொந்த குடும்பம் அல்லாத நீ எப்படி பாஸ்டரானாய்? யார் உன்னை பாஸ்டராக ஏற்படுத்தியது? நீ தானே உன்னை பாஸ்டராக நியமித்துக் கொண்டாய். நீ உன் இறுமாப்பினால் பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு நூதன பாஸ்டராக இராதே.

8) நீ அரசாங்கத்தில், தனியார் கம்பெனிகளில் வேலைசெய்து கொண்டு பாஸ்டர் ஊழியம் செய்கிறாய். இந்த உலகம் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தின் ஆளுகை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. லூக்.4:5-7. அவன் இந்த உலகத்தின் அதிபதி. யோ.16:11. இந்த அரசாங்கம் சாத்தானுடையது. அதில் வேலை பார்க்கும் நீயும் சாத்தானுடைய பணிவிடையாளே. ஆம், நீ பிசாசுக்காக வேலைசெய்கிறாய். இப்படியிருக்க தேவன் தம் சுய ரத்தத்தினால் சம்பாதித்த சபையை பக்திவிருத்தியடையச்செய்ய உன்னை எப்படி பாஸ்டராக ஏற்படுத்துவார்? நிச்சயமாக நீ இரண்டு

எஜமானுக்கு வேலை செய்கிறாய். லூக்.16:13. ஆதலால் தேவன் உன்னை ஏற்படுத்தவில்லை. நீயே உன்னை பாஸ்டராக்கிக் கொண்டாய். The world is controlled by the devil, and every man that work for the government, he's of the devil and working for the devil என்று நீ தியானிக்கும் செய்தி கூறவில்லையா.

9) நீ இன்னும் உலக ஸ்தாபன சபை பாரம்பரியத்திற்கு மரிக்காததினால் தான், ஏனோ தானோ என்று சபைக்கு வந்து செல்லுகிறாய். நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறாய். சரீரத்தில் ஒவ்வொரு அவையவங்களுக்கும் பிரத்தியேகமான பணி உண்டு என்று அறிவாயா? உன் பணி சாப்பிட்டு, தூங்கி, எழுந்திருப்பது தானா? உனக்கு தேவனுடைய இராஜ்யத்துக்கடுத்த காரியங்களில் நாட்டம் எதுவுமில்லையா? இப்பிரபஞ்ச வாழ்க்கையில் பணம், செல்வாக்கு, தன்னலமே உன் குறிக்கோளாக இருக்கிறதே. ஏனென்றால் நீ ஸ்தாபனசபை சுபாவத்திற்கு மரிக்கவேயில்லை.

10) பார், நீ இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறேன், செய்தியை நன்கு அறிந்திருக்கிறேன், ஆவியினால் வழிநடத்தப்படுகிறேன் என்கிறாய். உன் அலுவலகத்தில் பெண்களை வேலைக்கு அமர்த்துகிறாய். அதுவும் ஸ்தாபனசபை பெண்களை, அவிசுவாசிகளை. பெண்கள் வேலைக்கு வெளியே செல்லக்கூடாது என்று நீ விசுவாசிக்கும் செய்தி கூற, அதை உன் சுயநலனுக்காக மறுக்கிறாயே? பெண்களை வேலைக்கு அமர்த்தினால் சம்பளம் குறைவாகக் கொடுத்து, நீ உன் வருவாயை உயர்த்திக் கொள்ளலாம் என்ற நயவஞ்சக எண்ணம் தானே? அப்படியானால் உன் ருசியுள்ள பதார்த்தங்கள் கள்ளப் போஜனம் தானே! நீ இன்னும் உலகத்துக்கு மரிக்கவேயில்லை.

11) இக்காலத்துக்குரிய செய்தி செய்தி எனக் கூறிக்கொண்டே தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்காது தேவனை புறக்கணிக்கும் நீ, உன் தொழிலகத்தில் பணிசெய்கிறவர்களுக்கு ரூ.2,000/- கொடுத்து வெறும் வெற்று ரசீதில் கையெழுத்து வாங்கி அதை ரூ.12,000/-ஆக நிரப்பிக்கொள்ளுகிறாயே? உனக்கு செய்தி ஒருகேடா? செய்திக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? கள்ளத் தராசு கர்த்தருக்கு அருவருப்பானது அல்லவா! நீ சாப்பிடுகிறது வஞ்சனையினால் வந்த போஜனம் தானே! நீ இன்னும் உலகத்துக்கு மரிக்கவில்லை. நீ உலகத்தின் ஒவ்வொரு அணுவிற்கும் மரிக்க வேண்டியவனல்லவா.

12) இக்காலத்துக்குரிய செய்தியை ஊருக்கு உபதேசிக்கிறாய். உன் வீட்டில் கத்தோலிக்க சபை பாஸ்டர்களையும், திருத்துவசபை பாஸ்டர்களையும் விருந்தினராக அழைத்து, உபசரித்து, உன் தொழிலை தினகரனைப் போல் பெருக்கிக் கொள்ள நாடகம் ஆடுகிறாய். மாய்மாலம் பண்ணுகிறாய். கேட்டால் தொழில் வேறு ஊழியம் வேறு என்கிறாய். இக்காலத்துக்குரிய செய்தியை அறிந்த நீ, கர்த்தருக்கு பயப்படுதலை அறிந்துகொள்ளவில்லையே! மதியீனனுடைய வழி அவன் பார்வைக்கு செம்மையாகவே இருக்கும். உன் வாழ்க்கை ஒரு எழுதப்பட்ட நிருபமாயில்லையே? அங்கு கொள்ளை, இங்கு பக்திபரவசமா? உன் நெஞ்சின் வழிகளில் நட ஆனாலும் இவை எல்லாவற்றின் நிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்பதை மறந்துவிடாதே.

49) இன்றைக்கு நம் மத்தியிலுள்ள பெரும்பாலான பாஸ்டர்கள் இந்த உலகத்துக்கு மரிக்கவில்லை. அவர்கள் உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாகப் பிடித்து, பொருளாசையில் பழகின இருதயத்தை உடைய சாபத்தின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். நீ எப்படியிருந்தாலும் சரி, என் சபைக்கு வா, தசமபாகம் காணிக்கைக் கொடு, அதுபோதும், நான் உன் மனவிருப்பப்படியே உபதேசம் பண்ணுகிறேன் என்ற மனப்பான்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். தங்கள் சொந்த திட்டங்களை நிறைவேற்றி சுகபோகமான வாழ்க்கை வாழ விரும்புகிறார்கள். இவர்கள் செம்மையான வழியை விட்டு தப்பிநடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறார்கள். அநீதியின் கூலியை விரும்பி ஊழியம் செய்கிறார்கள். தங்களுடைய அக்கிரமத்தின் நிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டாலும், தங்கள் வழியை விட்டு அவர்கள் திரும்பவில்லை. சகோ.காலேப் யோசுவா சபையில் பிரிவினைகளை உண்டுபண்ணுகிறார் எனக் கூறி கூறியே அவரை சபைக்குள் விடாது உனது சொந்த உபதேசங்களை சபையில் நிலைநாட்டி, மக்களை அசத்தியத்திற்குள் வழிநடத்துகிறாய்.

50) ஆதலால் பிரியமானவர்களே நீங்கள் மணவாட்டி கூடாரத்தையல்ல, கல்வாரி சபையையல்ல, ஏல்பெத்தேல் சபையையல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையையல்ல; கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில், தேவன் தம் சுயரத்தத்தால் மீட்டுக்கொண்ட சபையில் நீங்கள் என்னோடு ஐக்கியமுள்ளவர்களாகும்படி உங்களுக்கு இதை எழுதுகிறேன். என்னுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவோடும் இருக்கிறது. 1யோ.1:3. தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைக்கிற தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். ஒரு கிறிஸ்தவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்தவனாக எந்தவொரு ஸ்தாபனசபையில் அங்கத்தினராயிராமல், உலகக் காரியங்களுக்கும், முறைமைகளுக்கும் மரித்து, தேவனுடைய வார்த்தை கூறுகிறபடி, இக்காலத்துக்குரிய செய்தி உரைக்கிறபடி வாழ்க்கை வாழ்ந்து நான் ஒரு கிறிஸ்தவனாகயிருப்பதால் பெருமைக் கொள்கிறேன், மகிழ்ச்சியடைகிறேன் என்று கூறுகிறவனாக இருக்க வேண்டும்.

51) பிரியமானவர்களே இவைகள் யாவற்றையும் உங்கள் பக்திவிருத்திக்காகவே எழுதினேன். நான் சத்தியத்திற்கு விரோதமாக ஒன்றும் எழுதவில்லை. சத்தியத்திற்கு அனுகூலமாகவே எழுதியுள்ளேன். வாருங்கள், நாம் இந்த உலகத்தின் ஒவ்வொரு அணுவிற்கும் மரித்து, உலக சிநேகத்தைவிட்டு, ஒரே ஆவியுள்ளவர்களாய், ஒரே அடிச்சுவடுகளில் நடப்போம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும் தேவனுடைய அன்பும் பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

*ஆகஸ்ட் & செப்டம்பர், 2003*

*கிறிஸ்துவின் அன்பில்,*
*சகோ.காலேப் யோசுவா.*